12th February 1955]

Collector is examining the question whether any contribution from the general public and the locality would be forthcoming. Meanwhile, estimates are being prepared and as soon as they are received necessary action would be taken.''

Basic Training Schools.

* 652 *Q.*—SRI Y. MANJAYA SHETTY (on behalf of Sri M. S. Mogral) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) how many Basic Training schools are functioning in the State now;

(*b*) whether there are any such schools exclusively for women; and

(*c*) if so, how many and where?

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' (*a*) 47.

'' (*b*) & (*c*) There are 13 such schools exclusively for women and they are at (1) Palghat, (2) Cuddalore, (3) Ramanathapuram, (4) Tanjore, (5) Kancheepuram, (6) Palayampatti (Ramanathapuram district), (7) Madras, (8) Pudupalayam (Cuddalore New Town), (9) Porto Novo (South Arcot), (10) Ittamoli (Tirunelveli), (11) Ambattur (Chingleput), (12) Kinnikambla (South Kanara) and (13) St. Thomas Mount.''

SRI M. KALYANASUNDARAM :—" ஆதாரக் கல்வியை பரப்புவதுதான் சர்க்காருடைய முடிவான கொள்கை என்று மந்திரி அவர்கள் கொடுத்த பள்ளி ஜாபிதாவிலிருந்து தெரிகிறது. ஆதாரக் கல்விதான் இறுதியான லட்சியம் என்று இந்த சட்டசபையிலோ, அல்லது மத்திய பார்லிமெண்டிலோ ஏதாவது சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ? எதை ஆதாரமாகக்கொண்டு சர்க்கார் இந்த முடிவுக்கு வந்தார்கள் ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" சர்க்கார் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து, பல வருஷங்களுக்கு முன்பே ஆதாரக்கல்விதான் இறுதி லட்சியம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஞாபகம் இருக்கின்ற வரையில் ஒரு மந்திரி சபையினால் இந்த முடிவு செய்யப்பட்டது என்று நினைக்கின்றேன்."

SRI A. RATNAM :—" ஆதாரக் கல்விப் பள்ளிகளை தனிப்பட்டோர் நடத்திக்கொண்டுவருகிறார்கள். கடலூரிலே நடத்தப்பட்டுவரும் ஆதாரக் கல்வி பள்ளி சம்பந்தமாக பல புகார்கள் வந்திருக்கின்றன. அதைப்பற்றி இதுவரையிலும் அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த மாதிரியான புகார்களுக்கிடமில்லாத முறையில் ஆதாரக் கல்விப் பாடசாலைகளை சர்க்காரே நடத்த முன்வருவார்களா என்று கேட்கிறேன் ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இந்தக் கேள்வி தனிப்பட்ட ஸ்தாபனத்தைப்பற்றி இருப்பதால். புதுக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்."

SRI P. B. K. RAJACHIDAMBARAM :—'' ஆதாரக்கல்வியே அரசாங்கத்தின் இலட்சியம் என்று இருப்பதால், நம் நாட்டில் இருக்கக் கூடிய இதர போதனா முறைப் பள்ளிக்கூடங்களை ஆதாரக்கல்வி போதனா முறைப் பாடசாலைகளாக மாற்ற அரசாங்கம் முயற்சி செய்யுமா ?''

[12th February 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அதற்குத்தான் அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது."

SRI Y. MANJAYA SHETTY :—" How many students are trained yearly in these schools and how many of them are employed? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not have information with regard to the exact number but all of them are employed."

SRI B. K. NALLASWAMY :—" ஆதாரக் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு, ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்கள் போதுமான அளவுக்கு இல்லாததினால், அங்கே வேலை கிடைப்பதில்லை. வேறு பள்ளிக்கூடங்களில் வேலை செய்வதால், இந்த ஆதாரக் கல்வி அடிப்படையை மறந்துவிடுகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிக் கூடங்களை குறைத்துக்கொள்ளவேண்டும், அல்லது ஆதாரக் கல்விப் பள்ளிகளை அதிகப்படுத்தவேண்டும். இதை சர்க்கார் கவனிப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ஆதாரக் கல்வி பள்ளிக் கூடங்களை இன்னும் அதிகமாக்குவதுதான் சர்க்காரின் நோக்கம். அதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சாதாரண பள்ளிக் கூடங்களில் சொல்லிக்கொடுப்பவர்களும், ஆதாரக்கல்வி முறையில் பயிற்சி பெற்று இருந்தால் இன்னும் நன்றாகச் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்பதே என் அபிப்பிராயம்."

Repayment of subsidy by Wynaad colonists.

* 503 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have passed any orders directing the Indian National Army men settling in Wynaad, the Malabar district, to refund the subsidy or loan granted to them for three years; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) No. The Administrative Officer, Sultan's Battery, while paying to the colonists the recoverable increased agricultural advance sanctioned by Government fixed the repayment of the amounts in three annual instalments.

" (*b*) The advance is a recoverable advance; the cases of all colonists have been treated alike and no distinction has been made in the case of Indian National Army colonists."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Have the Government received representations from these colonists to the effect that the pepper vines cultivated by them will take about 12 years to bear fruit and also in view of the fact that the price of tapioca has abnormally fallen, the period of instalment should be extended. If so, what steps the Government have taken in the matter? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I would like to have notice, Sir."